1989 மார்ச் 25] [டாக்டர் மு. கருணாநிதி]

எனவே, மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற கொள்கை வெற்றி பெற, இந்த அரசு, அயராது தொடர்ந்து பாடுபட்டுக் கொண்டிருக்கும்.

4. '' அதேபோன்று அரசியல் சட்டத்தின் 8ஆவது அட்டவணையில் உள்ள, தமிழ் உள்ளிட்ட பதினைந்து தேசிய மொழிகளும், இந்தியாவின் ஆட்சி மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது இவ்வரசின் நிலை. இச் சட்டத் திருத்தம் நிறைவேறும் வரை, ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும் என்பதை இவ்வரசு பல்வேறு மட்டங்களில் வலியுறுத்தும். அதே நேரத்தில், தமிழ் மக்களின் விருப்பத்திற்கு எதிராக, இந்தி மொழியைத் திணிப் பதற்காக எடுக்கப்படும் எல்லா முயற்சிகளையும் இவ்வரசு தடுத்து நிறுத்தத் தயங்காது ''

என்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருப்பதை மீண்டும் நினைவூட்டுவதோடு, இந்தி ஆதிக்க எதிர்ப்புக் காவல் அரணாக, இந்த அரசு என்றும் விளங்கும் என்பதை, உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய–மாநில நிதி உறவுகள்

5. இவ்வரசு பொறுப்பேற்று, கடந்த இரண்டு மாதங்களில், மத்திய–மாநில உறவுகளைப் பற்றியும், தமிழ்நாட்டிற்கு மத்திய அரசிடமிருந்து நியாயமாக வரவேண்டிய உதவிகளைப் பற்றியும் எடுத்துச் சொல்ல வாய்ப்புகள் கிடைக்கப் பெற்றன. பிப்ரவரித் திங்களில், புது தில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில், மத்திய–மாநில உறவுகளைப் பற்றி விரிவாக எடுத்துரைத்துள்ளேன். அவ்வமயம் சட்டம், நிர்வாகம், பொருளாதாரம் ஆகிய துறைகளில்